2026 மார்ச் மாதம் 13– ஆம் தேதி வெள்ளிக்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 12/2020

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13– ஆம் தேதி வெள்ளிக்கிழமை

திரு.அறிவழகன், Translator அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW15 – பாலகுரு |
| தகப்பனார் பெயர்: | சப்பானி |
| ஊர்: | மதுரை |
| வட்டம்: | மதுரை |
| மாவட்டம்: | மதுரை |
| தொழில்: | காவல் ஆய்வாளர் |
| வயது : | 50 |

13.03.2026

(எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர்)

**முதல் விசாரணை:–**

1. நான் தற்போது காவல்துறை தலைவர் தென்மண்டலம் அலுவலகத்தில் தனிப்பிரிவு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.03.2019 ஆம் தேதி ஆண்டிபட்டி காவல் நிலைய வட்ட ஆய்வாளராக பணி புரிந்தேன். ஆண்டிபட்டி காவல் நிலைய குற்ற எண். 109/2019 சட்ட பிரிவுகள் 279,304(ஏ), 304 (2) (5 Counts) இ.த.ச. மற்றும் 181(3) மற்றும் 177 மோட்டார் வாகன சட்டம், வழக்கில் இறந்துபோன தேனி அல்லிநகரத்தை சேர்ந்த சென்றாயன் மனைவி சுதா லட்சுமி வயது 32/2019 அவரது மகன் மணி என்ற மணிச்சாமி ஆகியோர் பிரேதத்தின் மீதான பிரேத விசாரணையை ஆண்டிபட்டி உட்கோட்ட துணை கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின் பேரில் மேற்கொள்ளப் பணிக்கப்பட்டு

அன்றையதினம் 11.15 முதல் 12.15 வரை க.விலக்கு அரசு மருத்துவகல்லூரி மருத்துமணையில் பிரேத அறையில் சுதாலட்சுமி என்பவர் உடல் மீது பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டேன்.

2. அதன்பின்பு 12.30 மணிமுதல் 13.30 மணிவரை அதே இடத்தில் மணி என்ற இளவர் மணிச்சாமி மீது பிரேத விசாரணை மேற்கொண்டேன். பின்பு இரு உடல்களையும் பிரேத விசாரணை அறிக்கையுடன் ஆண்டிபட்டி காவல் நிலைய காவலர் சந்துரு பாலாஜி என்பவர் மூலமாக மருத்துவ உடற்கூறாய்வுக்கு அனுப்பி வைத்தேன். இருவரது உடல்களும் மருத்துவ உடல்கூறாய்வு முடித்து பின் பிரேதங்களை சென்றாயன் உடன்பிறந்த சகோதரார் திரு.சதிஷ் என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டது. என்னிடம் காட்டப்படும் சுதாலட்சுமியின் பிரேத விசாரணை அறிக்கை நான் தயாரித்தது தான், மற்றும் என்னிடம் காட்டப்படும் மணி என்ற மணிச்சாமியின் பிரேத விசாரணை அறிக்கை நான் தயாரித்தது தான். அதை **அ.சா.ஆ.11** மற்றும் **அ.சா.ஆ.12** ஆக முறையே குறியீடு செய்யப்படுகிறது. எனது பிரேத விசாரணையை முடித்தேன். 02.04.2019 ஆம் தேதி இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான ஆண்டிபட்டி உட்கோட்ட துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>

3. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தவுடன் ஆய்வாளர் என்ற முறையில் நான் தான் புலன் விசாரணை மேற்கொள்வேன் என்றால் சரிதான், இவ்வழக்கில் இறந்தது 5 நபர்கள் என்பதால் முதல் விசாரணை உட்கோட்ட துணை கண்காணிப்பாளர் மேற்கொண்டார். துணை கண்காணிப்பாளருக்கு நான் எத்தனை மணிக்கு தகவல் சொன்னேன் என்றால் தற்போது ஞாபகம் இல்லை. உட்கோட்ட துணை கண்காணிப்பாளர் எனக்கு எத்தனை மணிக்கு உத்தரவு கொடுத்தார் என்றால் வாய் மொழி உத்தரவு நேரம் நினைவில்லை. பிணவறைக்கு நான் எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் 04.03.2019 ஆம்

தேதி 10.45 மணி முதல் 11.00 மணிக்குள் சென்றேன். முதலில் எந்த பிரேதத்தின் மீது நான் விசாரணை நடத்தினேன் என்றால் சுதாலட்சுமி என்பவரின் பிரேதத்தை விசாரணை செய்தேன்.

4. பஞ்சாயத்தார்களில் யாரை முதலாக விசாரித்தேன் என்றால் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டேன், பஞ்சாயத்தார்களை விசாரிக்கவில்லை. துணை போலீசார் தான் பிரேத விசாரணையை மேற்கொண்டார் என்றாலும், நான் எந்த பிரேத விசாரணையை மேற்கொள்ளவில்லை என்றாலும், துணை கண்காணிப்பாளர் எனக்கு வாய்மொழி உத்தரவு எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் நேரடியாக செல்லாமல் துணைக்காவலர்கள் தயார் செய்த அறிக்கையில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> :- இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 13.03.2026 அன்று வெள்ளிக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.03.13 18:49:43 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
13.03.2026